**25.06.2026**

**MCOP. No. 111/2023**

**ம.சா.1 – திருமதி. பிரியா.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.11 பி.ப**

நான் பயணம் செய்த வாகனம் சாலையின் இடது ஓரமான சென்றதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது உண்மை என்றால் சரிதான். நான் பயணம் செய்த வேனில் நான் ஓட்டுநர் இருக்கையின் பின்பக்க இருக்கைகளின் நடுவில் வலது ஓரமாக அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் வாகனம் நான் பயணம் செய்த வாகனத்தின் வலது பக்கமாக உரசியது. நான் அமர்ந்திருந்த இருக்கையின் அருகாமையில் இருந்த கண்ணாடி டிரைக்டர் உரசியதால் உடைந்துவிட்டதாக நான் சொல்லியுள்ளது உண்மைதான். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.2 ஆவணத்தில் எதிரே வந்த டிரைக்டர் வாகனத்திற்கு எவ்வித சேதாரம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின்போது நான் கைப்பேசியில் பேசிக்கொண்டியிருந்தேனா என்றால் இல்லை. நான் கைப்பேசியில் கையை வெளிபக்கமாக நீட்டிக்கொண்டு பேசிக்கொண்டிருந்ததனால்தான் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது கையை ஜன்னல் கம்பியில் கையை மடக்கி வைத்திருந்ததாக சொல்லியுள்ளேன் அது உண்மையாக இருந்தால் எனது கை துண்டிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் தேங்காய் லோடு இருந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிக்கு எதிராக ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் இதுவரை விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கையை பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தில் என்னை தவிர வேறு யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.25 15:09:33 +0530

என்றும் அது தொடர்பாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் வாகனம் முழுக்க முழுக்க விவசாயத்திற்கு பயன்பட கூடிய வாகனம் என்றால் சரிதான். நான் பயணம் செய்த வாகனத்திற்கு இடது பக்க கதவு மட்டும்தான் சேதமடைந்துள்ளதாக நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய வருமானத்தை காண்பிக்க ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் டெய்லரிங் வேலை செய்து வந்தேன். விபத்து சம்பந்தமாக எனது தாயார் புகார் கொடுத்தேன். அவரை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் சென்ற வேன் ஓட்டுநர் மீதுதான் தவறு என்றும் நான் கவனக்குறைவாக போக்குவரத்து விதிகளை மீறி கையை வெளியே நீட்டி சென்றததால்தான் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகிற்கான காரணம் என்றும் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு கொடுக்க நேரிட்டால் அதை கொடுப்பதற்கு 3ம் எதிர்மனுதாரர்தான் கடமைப்பட்டுள்ளார் என்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்கப்படுகிறது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் போதிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் போதிய தகுதி சான்று இல்லாத வாகனம் என்றால் எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாத 1ம் எதிர்மனுதாரரை வாகனத்தை ஓட்ட பயன்படுத்தியதும் போதிய தகுதி சான்று இல்லாமல் அந்த வாகனத்தை இயக்க அனுமதித்ததாலும் காப்பீடு விதிமீறல் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்து இரவு நேரத்தில் ஏற்பட்டுள்ளதாலும் விபத்தின்போது நான் வேனில் அமர்ந்து பயணம் செய்ததாலும் விபத்து யாருடைய கவனக்குறைவினால்

ஏற்பட்டது என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் எங்களுடைய வாகனம் மெதுவாகத்தான் சென்றது, டிரைக்டர்தான் கவனக்குறைவாக வந்தது. விபத்து நடந்த போது எங்களது வேன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றதது விபத்து தெற்கு பக்கமாக நடந்தது என்றால் சரிதான். வேனின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5 மருத்துவ இரசீதுகளில் கண்டுள்ள தொகைகள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மருத்துவ இரசீதுகளில் முன்பணம், டூப்ளிகேட் பில், அட்வான்ஸ் பில் என்ற தலைப்புகளில் கண்டுள்ள தொகையும் எனது பெயரிடப்படாத மருத்துவ இரசீதுகளில் கண்டுள்ள தொகைகளும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எவ்வித நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ இரசீதுகளை உண்மை என நிரூபிக்க மருத்துவ அலுவலர்களை விசாரிக்க போகிறேனா என்றால் அது பற்றி எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால சரியல்ல.

**நீதிமன்றம் பதிவு**

தற்பொழுது ஆஜராகியிருந்த அ.சா.1க்கு வலது கையின் முழங்கைக்கு கீழ் துண்டிக்கப்பட்டுள்ளது என்பது நீதிமன்றத்தால் கண்ணுற்று பதிவு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.36 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.25 15:09:44 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 25.06.2026